### பலியான அப்பாவி மாணவரையே குற்றவாளியாக்கி

# உண்மையை மூடி மறைக்கப் பார்க்கிறதா த.வெ.க. அரசு?

## கோவை மாணவர் இறப்புக்கு - கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை,ஆக.14-

கோவையில் பொறியியல் கல்லூரி மாணவன் அமுதன் கொலை தொடர்பாக 14 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. கஞ்சா விற்பனையை காட்டிக் கொடுத்ததால் சக மாணவர்களால் மாணவர் அமுதன் அடித்துக் கொலை என புகார் எழுந்துள்ளது. கோவை மாணவன் அமுதன் கொலை தொடர்பாக சக மாணவர்கள் 14 பேர் மீது செட்டிபாளையம் போலீஸ் வழக்குப்பதிவு செய்துள்ளது. மாணவன் அமுதன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் அரவிந்த், சிவரோஹித், ஆராவமுதன், மணி பாலா உள்பட 5 பேரை சிறையில் போலீஸ் அடைத்தது.

இச்சம்பவம் குறித்து கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி வலைதளப் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.



அவரது கண்டனம் வருமாறு:

கோவையில் தனியார் கல்லூரியில் படித்துவந்த முதலாம் ஆண்டு மாணவர், போதைப் பொருள் விற்பனை குறித்து தகவல் தெரிவித்ததற்காகப் போதை பழக்கத்தில் ஈடுபட்ட மாணவர்களால் அடித்து கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் நிலையில், அதை மாணவர்கள் இடையேயான கோஷ்டி மோதல் என்று திசைதிருப்பும் வகையில் வழக்கை முடித்து வைக்கப் பார்க்கிறது த.வெ.க. அரசு.

கல்லூரி நிர்வாகமும் காவல்துறையும் போதைப் பொருள் விற்பனை குறித்து தகவல் அளித்த பின் பாதுகாக்கத் தவறியதால்தான், அம்மாணவர் கொலை செய்யப்பட்டதாக அவரது பெற்றோர் கூறும் நிலையில், பலியான அப்பாவி மாணவரையே குற்றவாளியாக்கி உண்மையை மூடி மறைக்கப் பார்க்கிறதா, தவெக அரசு?

இந்தக் கொலையைச் செய்தவர்கள் மட்டுமின்றி, பாதுகாப்பு வழங்கத் தவறிய காவல்துறையினரையும் விசாரணைக்கு உட்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### கழக இளைஞர் அணிச் செயலாளர் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

# உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்! வடக்கு மண்டல கழக வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம்!

## சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ அறிவிப்பு!

சென்னை, ஆக. 14-

கழக இளைஞர் அணி செயலாளர் சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற் றும் வடக்கு மண்டல வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம் குறித்து சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ அறிவிப்பு வருமாறு:-

வடக்கு மண்டல தி.மு.க. வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம், வருகிற 16.8.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், "கலைஞர் அரங்கில்", கழக இளைஞர் அணி செயலாளர் சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் சிறப்புரையாற்றிட, சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தலைமையில், நடைபெறும் இக்கூட்டத்தில் மூத்த வழக்கறிஞர்கள் ஆர்.சண்முகசுந்தரம், இரா.விடுதலை, பி.வில்சன்,எம்.பி., வழக்கறிஞர் ஆர்.கிரிராஜன், எம்.பி., ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு, திரு ப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, விழுப்புரம் மத்திய, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு கிருஷ்ணகிரி மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு ஆகிய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, புதுச்சேரி -காரைக்கால் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் உயர்நீதி மன்ற மற்றும் மாவட்ட அரசு முன்னாள் வழக்கறிஞர்கள் - கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு என்.ஆர்.இளங்கோ அறவித்துள்ளார்.

---

### தமிழ்நாட்டில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் –

# பொது விநியோகத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது!

## மக்களவையில் க.செல்வம் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்!

புதுடெல்லி, ஆக. 14–

தமிழகத்தில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (NFSA), 2013 மற்றும் பொது விநியோகத் திட்டம் (PDS) செயல்படுத்தப்பட்டு வருவது குறித்து காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் மக்களவையில் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் பதிலளித்துள்ளது.

ஒன்றிய அரசின் பதிலின்படி, 16.07.2026 நிலவரப்படி தமிழகத்தில் 362.23 லட்சம் பயனாளிகள் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இலவச உணவுத்தானியங்களைப் பெற்று வருகின்றனர். தமிழகத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட 364.70 லட்சம் பயனாளிகள் என்ற இலக்கில் இது குறிப்பிடத்தக்க அளவாகும்.



மேலும், தமிழகத்தில் செயல்பட்டு வரும் நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை 2024ஆம் ஆண்டில் 34,805 ஆகவும், 2025ஆம் ஆண்டில் 34,890 ஆகவும் இருந்துள்ளது.

தமிழகத்திற்கு கடந்த மூன்று ஆண்டுகளில் ஆண்டுதோறும் 36.77 லட்சம் டன் உணவுத்தானியங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

பொது விநியோகத் திட்டத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்தும் வகையில், ரேஷன் அட்டைகளின் 100% தரவுத்தள மயமாக்கல் மற்றும் ஆதார் இணைப்பு, ஆன்லைன் உணவுத்தானிய ஒதுக்கீடு, விநியோகச் சங்கிலி கணினிமயமாக்கல், ePoSகருவிகள், உயிர்முறை அங்கீகாரம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், 'ஒரே நாடு – ஒரே குடும்ப அட்டை' (ONORC) திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் ரேஷன் அட்டை எடுத்துச் செல்லும் வசதியும், SMARTPDS மற்றும் நிகழ்நேர தரவு கண்காணிப்பு உள்ளிட்ட நவீன தொழில்நுட்ப நடவடிக்கைகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பயனாளிகளின் குறைகளை விரைவாகத் தீர்க்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட குறைதீர் அலுவலர் (DGRO) நியமிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் செயல்பாட்டைக் கண்காணிக்க மாநில உணவு ஆணையமும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் திட்டத்தின் செயல்பாட்டை ஆழமாக மதிப்பிடுவதற்கும் 2025–26ஆம் ஆண்டில் பிரதமரின் கரீப் கல்யாண் அன்ன யோஜனா (PMGKAY) திட்டத்தின் ஒருங்கிணைந்த மதிப்பீட்டை ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### கடலோரக் கப்பல் போக்குவரத்து, சொகுசுக் கப்பல் சுற்றுலாவை அரசு ஊக்குவிக்கிறதா?

# சரக்கு, பயணிகள் போக்குவரத்து விவரங்கள், எதிர்கால விரிவாக்கத் திட்டங்கள் என்ன?

## மாநிலங்களவையில் – கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!

நாமக்கல், ஆக.14–

டெல்லியில் நடைபெற்று வரும் நாடாளுமன்ற மாநிலங்களவை மழைக்கால கூட்டத் தொடரில், கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கடலோரக் கப்பல் போக்குவரத்து, சொகுசுக் கப்பல் சுற்றுலா மற்றும் சரக்கு, பயணிகள் போக்குவரத்து விவரங்கள், எதிர்கால விரிவாக்கத் திட்டங்கள் குறித்து கேள்வி எழுப்பினார்.

கடலோரக் கப்பல் போக்குவரத்து மற்றும் சொகுசுப் பயணக் கப்பல் சுற்றுலா ஆகியவை அரசால் ஊக்குவிக்கப்படுகின்றனவா? அவை குறித்த விவரங்கள் என்ன? என அவர் கேள்வி எழுப்பினார். மேலும், இத்துறைகளின் கீழ் இது வரை கையாளப்பட்ட சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்து குறித்த விவரங்களையும், அரசின் எதிர்கால விரிவாக்கத் திட்டங்கள் குறித்தும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால், அரசு கடலோரக் கப்பல் போக்குவரத்து மற்றும் சொகுசுப் பயணக் கப்பல் சுற்றுலாவை ஊக்குவித்து வருகிறது. அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் இணைப்பு 1 இல் உள்ளன. சரக்கு போக்குவரத்து மற்றும் சொகுசுப் பயணக் கப்பல் பயணிகள் போக்குவரத்து குறித்த விவரங்கள் அதில் இடம் பெற்றுள்ளது.



2047ஆம் ஆண்டிற்குள் உள்நாட்டு நீர்வழிகள் மற்றும் கடலோரக் கப்பல் போக்குவரத்தின் பங்களிப்பை 6%லிருந்து 12%ஆக உயர்த்தும் வகையில், 2026ஆம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் 'கடலோரச் சரக்கு போக்குவரத்து ஊக்குவிப்புத் திட்டம்' (Coastal Cargo Promotion Scheme) அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

QR அடிப்படையிலான குடியேற்ற அனுமதி அமைப்பு (Immigration Clearance System) அறிமுகப்படுத்தப்பட்டுளது. இதில் பயணத்தின்போதே குடியேற்ற அனுமதி பெறும் வசதியும் உள்ளதால், ஒரு பயணியின் குடியேற்ற அனுமதி நேரம் சுமார் 30 வினாடிகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. சொகுசுப் பயணக் கப்பல் பயணிகள் மற்றும் அவர்களின் உடைமைகளுக்கான சுங்க அனுமதி நடைமுறையில், 'வணிகர் கூடுதல் நேரக் கட்டணம்' (MOT) வசூலிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது (15.06.2026 தேதியிட்ட CBIC சுற்றறிக்கை); இது பயணிகளின் அனுமதியை விரைவாகவும் தடையின்றியும் மேற்கொள்ள உதவுகிறது. விரைவான சுங்க அனுமதியை எளிதாக்கும் வகையில், சொகுசுப் பயணக் கப்பல்களுக்கான டிஜிட்டல் மயமாக்கப்பட்ட சுங்க நடைமுறைகள் மற்றும் சுய அறிவிப்பு (selfdeclaration) முறை ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

viii. சொகுசுக் கப்பல்கள் மூலம் வரும் வெளிநாட்டு சுற்றுலாக் குழுக்களின் நுழைவை எளிதாக்குவதற்காக மின்குழு வருகை விசா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சொகுசுக் கப்பல்களுக்கு உத்தரவாதமான நங்கூரமிடும் வசதி வழங்கப்படுகிறது, வெளியேற்றும் கட்டணங்கள் நீக்கப்பட்டு, சலுகையான சீரான கட்டண முறை வழங்கப்படுகிறது; மற்றும்

x. வெளிநாட்டு சொகுசுக் கப்பல்களுக்கு கேபோடேஜ் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என பதில் அளித்தார்.

---

### 'கோவில் நிதியை கல்விக்குப் பயன்படுத்தலாம்' என்ற நீதிமன்ற தீர்ப்பின்படி

# நிலுவையில் உள்ள 6 கல்லூரிகளைக் கட்டிட அரசு முன்வர வேண்டும்!

## இந்து சமய அறநிலையத்துறை முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, ஆக.14–

'கோவில் நிதியை கல்விக்குப் பயன்படுத்தலாம்' என்ற உயர்நீதி மன்ற உத்தரவினை ஏற்று, ஏற்கனவே அறிவிக்கப்பட்டு நிலுவையில் உள்ள 6 கல்லூரிகளை ஏற்படுத்த இந்த அரசு முன்வர வேண்டும் என்று இந்து சமய அறநிலையத்துறை முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

தி.மு.க.வுக்கு எதிரான மனுவை தள்ளுபடி செய்து கோவில் நிதியை கல்விக்குப் பயன்படுத்தலாம் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறை முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அளித்துள்ள பேட்டி வருமாறு:–

திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு 2021 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் 10 கல்லூரிகள் திருக்கோயில்கள் சார்பில் கட்டப்படும் என்று திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகன் எங்கள் உயிரினும் மேலான முத்துவேல் கருணாநிதி ஸ்டா லின் அவர்கள் வழிகாட்டுதலோடு அறிவிக்கப்பட்ட அந்த அறிவிப்பில் நான்கு கலைக் கல்லூரிகள் அந்த ஆண்டு டிசம்பர் மாதமே துவக்கப்பட்டது.

அந்த அரசாணையை எதிர்த்து அன்றைய தினம் உயர் நீதி மன்றத்தில் தலைமை நீதிபதி அவர்களிடம் இந்த அரசாணைக்கு தடை கேட்டு உயர் நீதிமன்றம் சென்ற நிலையில் அவர்கள் தடையாணைக்கு முன்பாகவே சென்னை கொளத்தூரிலேயும், திருச்செந்தூர் திருக்கோயில் சார்பிலேயும், அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் சார்பிலேயும், பழனி தண்டாயுதபாணி



திருக்கோயில் சார்பிலேயும் நான்கு கல்லூரி களும் வாடகை கட்டிடத்தில் துவங்கப்பட்டது.

நீதிமன்றத்தில் முறையாக அன்றைய தினம் அரசினுடைய தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம் அவர்களின், அவர்கள் வாதத்தை அடுத்து நான்கு கல்லூரிகளுக்கும் தடை இல்லை இனி மேற்கொண்டு கல்லூரிகள் கட்ட வேண்டுமென்றால், அறிவித்த அறிவிப்பிலே இருக்கின்ற ஆறு கல்லூரிகள் கட்டுவதற்கு நீதிமன்றத்தின் உத்தரவை பெற்று கட்ட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் மேல்முறையீடு மனுவாக உச்ச நீதிமன்ற த்திற்கு சென்றார்கள். உச்ச நீதிமன்றத்திலேயும் கல்லூரிகள் கட்டப்படுவது அறநிலையத்துறையின் கொடைகளின் சட்டத்தின்படி ஏற்புடையது என்று அங்கேயும் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

ஏற்கனவே உயர்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட மனுவின் அடிப்படையில் அவர்கள் மீண்டும் இந்த கல்லூரிகள் கட்டுவதற்கு உண்டான வழிகாட்டி நெறிமுறைகள் ஒழு ங்காக கடைபிடிக்கவில்லை என்று ஒரு வழக்கை பதிவு செய்திருந்தார்கள்.அது நேற்றைக்கு உயர் நீதிமன்றத்திலே அந்த வழக்கு வந்தது .அந்த வழக்கின் அடிப்படையில் உயர் நீதி மன்றத்தின் சிறப்பு அமர்வு மாண்பமை பொருந்திய நீதியரசர் ஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையில் இருக்கின்ற அந்த பெஞ்சிலே கல்லூரிகள் கட்டப்பட்டது ஞாயம் தான், முறை யானது தான், அறநிலைத் துறை என்பது அறக்கொடைகளின் சட்டப்படி அந்த கல்லூரிகள் கட்டப்பட்டது ஞாயம் என்ற தீர்ப்பை வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகன் அவருடைய திட்டத்தை நேற்றைக்கு உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்ட மகிழ்ச்சியை தான் இன்றைக்கு உங்களோடு பகிர்ந்து கொண்டுள்ளோம்.

**50 ஆண்டுகள் செய்ய வேண்டியதை 5 ஆண்டில் செய்த திராவிட மாடல் அரசு!**

மேலும் அவருடைய தீர்ப்பிலே இந்த நான்கு கல்லூரிகளில் இரண்டு கல்லூரிகள் கட்டப்பட்டு விட்டன. கபாலீஸ்வரர் திருக் கோயில் கொளத்தூர் கல்லூரியும் அதேபோல் பழனி ஆண்டவர் திருக்கோயி லுடைய பழனி ஆண்டவர் கல்லூரியும் கட்டப்பட்டு விட்டது.மீதம் இருக்கின்ற கல்லூரிகள் கட்டப்பட வேண்டும் அது திருக்கோயி லின் நிதி இருந்தால், திருக்கோயில் நிதி யிலிருந்து கட்டலாம் அப்படி இல்லை என்றால் அரசு அதற்கு உதவி செய்ய வேண்டும் என்று தீர்ப்பளித்து இருக்கின்றார்கள் .அந்த தீர்ப்பின் அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்த இரண்டு கல்லூரிகளும் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு சொந்த கட்டிடத்தை கட்ட இந்த அரசு நீதிமன்ற தீர்ப்பின்படி முன்வர வேண்டும். அதோடு ஏற்கனவே நிலுவையிலே அறிவிக்கப்பட்டிருக்கின்ற ஆறு கல்லூரிகள் கடையம், கலசப்பாக்கம், அணைக்கட்டு திருக் காட்டுப்பள்ளி, அதேபோல் லால்குடி, சென்னை கீழ்பாக்கம் அந்த ஆறு கல்லூரிகளையும் ஏற்படுத்துவதற்கு இந்த அரசு முனைப்பு காட்ட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத்துறையை பொறுத்தவரையில் 50 ஆண்டுகளில் செய்ய வேண்டிய பணிகளை 5 ஆண்டுகளில் நிறைவேற்றிய அரசு திராவிட மாடல் அரசு. ஆன்றோர்கள், சான்றோர்கள், பாராட்டுகின்ற அரசு, ஆத்திகர்கள் நாத்திகர்கள் என அனைவருக்கும் உண்டான அரசு என்பதை கடந்த காலம் நிரூபித்தது போல் இந்தாண்டும் கடந்த காலத்தினுடைய திட்டங்களை அவர்களுடைய வழிகாட்டுதலாக எடுத்துக் கொண்டு நிறைவேற்ற வேண்டும் என்று முன்னாள் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் என்ற முறையில் எனது கோரிக்கையை வைக்கிறேன்.

செய்தியாளர்: சார் இப்ப இருக்கின்ற இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பல்வேறு குற்றச்சாட்டு களையும் விமர்சனங்களையும் முன்வைத்துக் கொண்டிருக்கின்றார் அதைப்பற்றி

பி.கே.சேகர்பாபு: நான் முன்னரே ஏற்கனவே சொன்னது போல் சட்டியிலே இருந்தால் தான் அகப்பையிலே வரும், இல்லாததையும் பொல்லாததையும் வாய்க்கு வந்தபடி பேசுவது நாகரிகம் அல்ல தக்கச் சான்றோடு அவர் எடுத்துக் கூறினால் பதில் சொல்ல தயாராக இருக்கிறோம் என்று பேட்டி அளித்தார்.

---

### அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்

# கல்வி உதவித் தொகை தாமதத்தால் மாணவர் சேர்க்கை தடை!

## முதல்வர் உரிய நடவடிக்கை எடுத்திட – முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலியுறுத்தல்!

சென்னை, ஆக.14-

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை கிடைப்பதில் ஏற்பட்ட தாமதத்தால் மாணவர் சேர்க்கை தடைபட்டுள்ளது. மாணவர்களின் எதிர்கால நலனை கருதி முதல்வர் உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தியிருப்பதாவது:

இங்கிலாந்து நாட்டில்



உள்ள Manchester School of Architecture கல்வி நிறுவனத்தில் M.Arch படிக்க தேர்வான சென்னையைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கு தமிழ்நாடு அரசின் "அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத் தின்" கீழ் வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகையை நேரடியாக ஏற்க மறுத்துள்ள அந்த கல்வி நிறுவனம், இந்திய ஒன்றிய அரசின் மூலம் வழங்கப் பட் டால் மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடங்கி ஒரு மாதகாலம் ஆகும் நிலையிலும் உரிய தீர்வு எட்டப்படாமல் இருப்பதாக கிடைக்கும் தகவல்கள் கவலையைத் தருகின்றன. அதேபோல University of Leeds உள்ளிட்ட கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி சேரவிருந்த சில மாணவர்களுக்கு அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை சென்று சேர்வதில் ஏற்பட்ட தாமதத்தினால் காலக்கெடு முடிந்து, சேர்க்கை தடைபட்டு இருப்பதாகவும் தெரியவருகிறது.

மாணவர்களின் எதிர்கால நலன் கருதி இந்தப் பிரச்சினைகளை விரைவாக களைந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

---

### குழந்தைகளுக்காக வடிவமைக்கப்பட்ட

# மொபைல் செயலிகளில் பாலியல் விளம்பரங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

## மாநிலங்களவையில் – கவிஞர் சல்மா கேள்வி!

புதுடெல்லி, ஆக. 14 –

குழந்தைகளுக்காக வடிவமைக்கப்பட்ட மொபைல் செயலிகளில் பாலியல் விளம்பரங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினர் கவிஞர் சல்மா கேள்வி எழுப்பினார்

இது குறித்து அவர் எழுப்பிய கேள்வி வருமாறு; –


குழந்தைகளுக்காக வடிவமைக்கப்பட்ட மொபைல் செயலிகளில் Sexually Explicit விளம்பரங்கள் இடம்பெறுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா;

இத்தகைய வெளிப்படையான உள்ளடக்கங்களுக்கு குழந்தைகள் ஆளாகாமல் தடுப்பதற்காக, Google Play Store, Apple App Store மற்றும் App Developers உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அரசு வழங்கியுள்ள குறிப்பிட்ட வழிமுறைகள் மற்றும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை; மற்றும்

Child Sexual Abuse Material CSAM அகற்றுவதை உறுதி செய்வதற்காக அரசு மேற்கொண்டுள்ள குறிப்பிட்ட நடவடிக்கைகள் யாவை.

இதற்கு ஒன்றிய அமைச்சர் அளித்த பதில் வருமாறு;–

அரசின் கொள்கைகள், குழந்தைகள் உட்பட அனைத்து இணையப் பயனர்களுக்கும் திறந்த, பாதுகாப்பான, நம்பகமான மற்றும்



பொறுப்புக்கூறலுடன் கூடிய இணையச் சூழலை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 (IT Act) மற்றும் தகவல் தொழில்நுட்பம் (இடைநிலையர்கள் வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் ஊடக நெறிமுறைகள்) விதிகள், 2021 (IT Rules) ஆகியவை இணைந்து, டிஜிட்டல் தளங்களில் சட்டவிரோதமான மற்றும் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களை கையாள்வதற்கான கடுமையான சட்டக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

குழந்தைகளுக்கான சமூக ஊடகங்கள் மற்றும் மொபைல் செயலிகளில் CSAM

இந்தத் தளங்களில் குழந்தைகள்பாலியல்துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுவது தொடர்பான உள்ளடக்கம் (Child Sexual Abuse Material CSAM) இடம் பெற்றதாக சமீபத்தில் வெளியான செய்திகளை இந்திய அரசு தீவிரமாகக் கவனத்தில் கொண்டுள்ளது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட தளங்களுக்கு உடனடி திருத்த திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையமும் (NCPCR) இந்த சமூக ஊடகத் தளங்களுக்கு அறிவிப்புகளை அனுப்பியுள்ளது.

**சட்டக் கட்டமைப்பு!**

IT Act மற்றும் IT Rules இணைந்து, டிஜிட்டல் நலன், பயனர் பாதுகாப்பு மற்றும் பொறுப்பான டிஜிட்டல் பங்கேற்பை உறுதி செய்வதற்கான சட்டக் கட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளன.

**தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000**

IT Actன் கீழ் பல்வேறு வழங்கப்பட்டுள்ளன. இணையக் குற்றங்களுக்கு தண்டனைகள் அவற்றில்:

- அடையாளத் திருட்டு பிரிவு 66C
- ஆள்மாறாட்டம் பிரிவு 66D
- தனியுரிமை மீறல் பிரிவு 66E
- ஆபாச அல்லது பாலியல் வெளிப்படையான உள்ளடக்கத்தை வெளியிடுதல் அல்லது பரப்புதல் பிரிவுகள் 67, 67A மற்றும் 67B ஆகியவை அடங்கும்.

மேலும், பிரிவுகள் 78 மற்றும் 80 காவல்துறைக்கு இத்தகைய குற்றங்களை விசாரிப்பதற்கான அதிகாரத்தை வழங்குகின்றன.

**கல்வித் துறையில் நடவடிக்கைகள்**

கல்வி அமைச்சகம் 2020 ஜூலையில் PRAGYATA Digital Education Guidelines வெளியிட்டது. இது பாதுகாப்பான மற்றும் பயனுள்ள இணையவழிக் கல்விக்கான கட்டமைப்பை வழங்குகிறது. மாணவர்களின் நலன் மற்றும் சமூக ஊடகங்கள் மற்றும் மின்னணு சாதனங்களை பொறுப்புடன் பயன்படுத்துவதற்கும் இது முக்கியத்துவம் அளிக்கிறது.

CBSE, டிஜிட்டல் ஒழுக்கம் (Digital Etiquette) தொடர்பான வழிகாட்டுதல்கள், ஆசிரியர்களுக்கான சைபர் பாதுகாப்புப் பயிற்சி, Cyber Security Handbook வெளியீடு மற்றும் இணையப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த பள்ளிகளில் Cyber Clubs அமைப்பதற்கான அறிவுறுத்தல்கள் மூலம் இந்த முயற்சிகளுக்கு கூடுதல் ஆதரவு அளித்துள்ளது.

NCERT தனது பாடத்திட்டத்திலும் சைபர் பாதுகாப்பை இணைத்துள்ளது. இதில் XI மற்றும் XII வகுப்புகளுக்கான "Societal Impacts என்ற பாடப்பகுதியும் அடங்கும். மேலும், CIETNCERT, சைபர் பாதுகாப்பு தொடர்பான கல்வி வளங்களை உருவாக்கி பரப்பியுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.